**முதன்மை சார்பு நீதிமன்றம், ஈரோடு, ஈரோடு மாவட்டம்.**

O.S.No.253/2025 பெயர் : பிரசன்னா வெங்கடேஷ் நாள் : 17.04.2026

வா.சா.1 ஆஜர். சத்திய பிரமாணத்தின் பேரில் விசாரணை செய்யப்பட்டார்.

**வா.சா.1: பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி:-**

வா.சா.ஆ.6-ல் GWOP.232/2009-ன் மனுவில் வழக்கு சொத்தையும் சேர்த்து தாக்கல் செய்ததாக குறுக்கு விசாரணையில் கூறியிருந்தேன். என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.6 ஆவணத்தில் தாவா சொத்து விபரம் குறிப்பிடவில்லை என்றால், சரிதான். நான் தாக்கல் செய்துள்ள வழக்குரையில் தாவா சொத்தில் கட்டிடங்கள் எதுவும் இருந்ததாக குறிப்பிட்டு கூறவில்லை என்றால், சரிதான். இறந்துபோன கமலாட்சிக்கு திருமணம் ஆகவில்லை, அவர்களுக்கு ஆதரவாக வேறு யாரும் இல்லை என்றால், சரிதான். என் தாத்தா நாச்சிமுத்து தான் அவரை பராமரித்து வந்தார் என்றால், சரிதான். தாவா சொத்தில் உள்ள கட்டுமானங்கள் அனைத்தும் என் தாத்தா நாச்சிமுத்து கட்டியது என்றால், சரியல்ல, நாச்சிமுத்துவும், கமலாட்சியும் சேர்ந்து தான் கட்டிடம் கட்டினார்கள். கமலாட்சியும் கட்டிடம் கட்டுவதற்கு பண உதவி செய்ததற்கான ஆவணம் என் வசம் உள்ளதா என்றால், உள்ளது. மேற்படி சங்கதியை என் வழக்குரையிலோ, பிரமாண வாக்குமூலத்திலோ குறிப்பிட்டு கூறவில்லை என்றால், சரிதான். வழக்கு சொத்தில் உள்ள கட்டுமானம் முழுவதும் நாச்சிமுத்துவின் தனிப்பட்ட வருமானத்தில் கட்டப்பட்டது என்றால், சரியல்ல. என்னை கமலாட்சி தத்து எடுத்துக்கொண்டதற்கான காரணம் அவர் அரசு பணியில் இருந்ததாலும், தன்னுடைய பணிக்காலத்தில் ஒரு சமயம் தான் இறக்க நேரிட்டால், அவரது பணி வேறு யாருக்கோ சென்றடையும் என்பதால்தான் என்னை தத்தெடுத்துக் கொண்டார்

என்றால், சரியல்ல, அவருக்கு வயதாகிவிட்டதால், அவரை கவனித்துக்கொள்வதற்கு நான்தான் அவருடன் இருந்தேன். கமலாட்சி என்னை தத்தெடுத்த சமயத்தில் எனக்கு 6, 7 வயது இருக்கும். கமலாட்சி இறந்த தேதி 12.01.2008 என்றால், சரிதான். கமலாட்சி உயிருடன் இருந்த காலம் வரை தாவா சொத்தில் இருந்த முதல் தளத்தில் குடியிருந்து வந்தார் என்றால், சரிதான். கமலாட்சி உயிருடன் இருந்த காலத்தில், தாவா சொத்தில் இருந்த தன்னுடைய பாகத்தை, நாச்சிமுத்துவுக்கு விடுதலை செய்துக் கொடுத்து விட்டார் என்றால், சரியல்ல. கமலாட்சி, நாச்சிமுத்துவின் அனுமதியின் பேரில் தான் தாவா சொத்தின் முதல் தளத்தில் குடியிருந்து வந்தார் என்றால், இரண்டு பேரும் சேர்ந்து தான் சொத்தை வாங்கி வீடு கட்டியதால், கமலாட்சி முதல் தளத்தில் அனுமதியுடன் குடியிருந்து வந்தார். கமலாட்சி உயிருடன் இருந்த காலம் வரை தாவா சொத்துக்களில் அவர் கூட்டுப் பங்குதாரர் என்ற முறையில் குடியிருந்து வந்தார் என்பதை காட்டுவதற்கு ஆதாரம் ஏதாவது உள்ளதா என்றால், உள்ளது. கமலாட்சி அம்மாள் தாவா சொத்தில் உள்ள வீடுகளுக்கு வரி கட்டியதற்கான வரி இரசீது உள்ளதா என்றால், இல்லை, நாச்சிமுத்து பேரில் தான் உள்ளது. கமலாட்சி அம்மாள் இறந்த பிறகு நான் என் பெற்றோரின் பராமரிப்பில் வளர்ந்து வந்தேன் என்றால், சரிதான். என் தகப்பனாரும், தாயாரும் எனது நலனுக்கு எதிராக செயல்படுபவர்கள் இல்லை என்றால், சரிதான். என்னிடம் காட்டப்படும் 24.11.2011-ம் தேதி என் தாயார் உள்பட மற்ற பிரதிவாதிகளும் சேர்ந்து செய்துக்கொண்ட பதிவு செய்யப்பட்ட பாகப்பிரிவினைப் பத்திரத்தின் பதிவாளர் அலுவலக சான்றிட்ட நகல் என்றால், அதைப்பற்றி எனக்கு தெரியாது. 2011 நவம்பர் மாதம் நானும், என் தாயாரும் ஒன்றாக தான் இருந்தோம் என்றால், சரிதான். எனக்கு 2014-ம் வருடம் 18 வயது பூர்த்தி

அடைந்திருந்தது. 2014-லிருந்து வழக்கு தாக்கல் செய்யும் வரை தாவா சொத்தில் எனக்கு உரிமை கொண்டாடியதற்கான ஆவணம் ஏதாவது நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால், தாவா சொத்தில் எனக்கு உரிமை இருந்ததால்தான், நானும் என் பெற்றோரும் தற்போது வரை அங்கு குடியிருந்து வருகிறோம். தாவா சொத்து அமைந்துள்ள பகுதி 34, வடக்கு சின்னமாரியம்மன் கோவில் வீதி, கருங்கல்பாளையம், ஈரோடு-3. தாவா சொத்தின் தரைதளத்தில் யார் குடியிருந்து வருகிறார் என்று எனக்கு தெரியாது. தாவா சொத்தின் தரைத்தளம் 3-ம் பிரதிவாதி ஆனந்தகுமார் என்பவரின் அனுபவத்தில் இருந்து வருகிறது என்றால், சரிதான். கமலாட்சி அம்மாள் இறப்பிற்கு பின்னிட்டு நாங்கள் முதல் தளத்தில் குடியிருந்து வருகிறோம். தரைத்தளம் ஆனந்தகுமார் என்பவர் அனுபவத்தில் இருந்து வருகிறது. எதிர்வழக்குரை தாக்கல் செய்த பின்னிட்டு, என் தாயாரிடம் பாகப்பிரிவினை செய்துக்கொண்ட விபரம் பற்றி கேட்டேனா என்றால், கேட்டேன், எனக்கும், பாகப்பிரிவினைக்கும் சம்மந்தம் இல்லை எனக்கூறினார். என் தாயார் 3-ம் பிரதிவாதிக்கு எதிராகவும், மற்ற பிரதிவாதிகளுக்கு எதிராகவும் வேறு இருவழக்குகள் தாக்கல் செய்து, நிலுவையில் உள்ளது என்றால், அதுப்பற்றி எனக்கு தெரியாது. தாவா சொத்து என்னை தத்தெடுத்துக்கொண்ட தாயாரான கமலாட்சி உயிருடன் இருந்தபோதே, அவருடைய பாகத்தை நாச்சிமுத்துக்கு விடுதலை செய்துக்கொடுத்து விட்டதால், கமலாட்சியின் வாரிசு என்ற முறையில் நான் பாகப்பிரிவினை கோரமுடியாது என்றால், சரியல்ல. என் தாயாரான இவ்வழக்கின் 2-ம் பிரதிவாதிக்கும், 3, 4 பிரதிவாதிகளுக்கும் இடையே ஏற்பட்ட கருத்து வேறுபாட்டை மனதில் கொண்டு என் தாயாரின் தூண்டுதல் பெயரில் இந்த வழக்கு தாக்கல்

செய்யப்பட்டுள்ளது என்றால், சரியல்ல. நான் தாவா சொத்தைப் பொறுத்து கமலாட்சியின் தத்து மகன் என்ற அடிப்படையில் எனக்கு உரிமை உள்ளது என பரிகாரம் கோராமல் வழக்கு தாக்கல் செய்துள்ளதால் தாவா தள்ளுபடி செய்யத்தக்கது என்றால், சரியல்ல.

**பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்தி வைக்கப்படுகிறது.**

O.S.No.253/2025 Dated : 17.04.2026
PSJC, Erode.